1979 நவம்பர் 5]

[முற்பகல் 10–30]

திரு. அ. ரகுமான்கான்: ஆய்வில் இருக்கிறது என்று சொன்னீர்கள், சரி. நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால் கூட போதும் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, ஆய்வில் இருக்கிறது என்றால் அதற்கு உயிர் இருக்கிறது என்று பொருள், உட்காருங்கள். அடுத்து, திரு. பண்ணை சேதுராம் .. ..

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்றத்தில்.. .. .. ..

திரு. அ. ரகுமான்கான்: இன்றே எடுத்துக்கொள்வதாக என்னிடத்தில் நேரிடையாகச் சொன்னீர்கள். உரிமைப் பிரச்னையைத் தள்ளிக் கொண்டே போனால் எப்படி? நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கட்டாயப் படுத்த முடியாது, என்னைக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆய்வில் இருக்கிறது, அமருங்கள். .. ..

திரு. அ. ரகுமான்கான்: சட்டசபை முடிவதற்குள்ளாவது எடுத்துச் கொள்வீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். திரு. கே. பண்ணை சேதுராம்,

ஆ 'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெறாதது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நூலகத்தில் எல்லா தினசரி பத்திரிகைகளும் வந்து கொண்டிருக்கின்றன. (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்). இங்கே, அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கிற பத்திரிகைகளும் .... (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் உங்களை உட்காரச் சொல்லுகிறேன். நீங்கள் பேசிக் கொண்டே இருந்தால், எப்படி? திரு. பண்ணை சேதுராம் பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள். என் ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னவுடன் திரு. ரகுமான்கான் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும், உட்கார வேண்டும். இல்லையென்றால். அது நல்லதல்ல. சட்ட விதிகளைப் படித்து விட்டு, பிறகு என்னிடம் பேசுங்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய தமிழ் நாடு சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிற நூலகத்தில் எல்லா பத்திரிகைகளும் தினசரி பத்திரிகைகளும் சரியாக வந்து கொண்டிருக்கின்றன. இங்கே அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிற. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாக, விதிகளைச் சுட்டிக்காட்டித் தந்திருக்கிறீர்களா? . . . . . .

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன், பாயின்ட் ஆஃப் ஆர்டர். அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கின்ற முரசொலி, அலை ஓசை போன்ற பத்திரிகைகள் எல்லாம் சரியாகப் போடப்பட்டு, இங்கே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அரசாங்கத்தினுடைய செயல்கள் அத்தனையையும் மக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கொடுக்கின்ற 'நீதியின் குரல்' சென்ற முறை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த முறை அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எக்காரணம் என்பதை நான் சபாநாயகர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: இதே பத்திரிகை மீது ஏற்கனவே சட்டமன்றத்தில் பேசி, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அதைப் பற்றி ஏன் அவர் கேள்வி கேட்கிறார் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்கள் என் அறையில் வந்து சந்தித்து அதைப்பற்றி விவாதிக்கக் கோருகிறேன்.

இ. பேரவை அலுவல் சிறிது நேரம் ஒத்திவைப்பு—உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் பதவி ஏற்பு குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: நாளைய தினம் நம்முடைய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் தலைமை நீதிபதியாக பதவியேற்க இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ்கள் வந்திருக்கின்றன. காலை 10.45 மணிக்கு அந்த வைபவம் இருக்கிற காரணத்தால், நாளைய தினம் சட்டசபை ஒத்தி வைக்கப்படுமா? இல்லாவிட்டால். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், இது அல்ல முறை. தாங்கள் பேரவைத் தலைவரை அணுகி, இந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே, மாண்புமிகு முதலமைச்சரையும் பேரவை முன்னவரையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரையும் அணுகி, அதற்கான